முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

## O.S. No.36/2019

2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் திங்கள்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன் படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பி.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஜாதி | |
| தந்தையார் பெயர் | வெங்கடேசன் | மதம் | |
| கிராமம் | திருவாரூர் | தொழில் | |
| வட்டம் | திருவாரூர் | வயது | 35 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதி கம்பெனியில் திருத்துறைப்பூண்டி கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

1) சொக்கலிங்கம் என்பவர் பெற்ற கடன் குறித்த 4-ம் பிரதிவாதி கம்பெனியில் கணக்கு பட்டியல் கணினியிலிருந்த எடுக்கப்பட்ட கணக்கு பட்டியலின் உண்மை நகல் **பி.சா.ஆ.1** (வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் நகல் என்பதாலும் அதன் உண்மை தன்மை குறித்தும் ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).

**குறுக்கு விசாரணை**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.08.07 18:08:47 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.